தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 18, சித்ரபானு—திருவள்ளுவர் ஆண்டு 2034

2003 ஏப்ரல் 1, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்"

பின்னர் நிகழ இருப்பவற்றை முன்னரே அறிந்துகொள்ளும் அறிவுடையவர்களுக்கு, அவர்கள் அதிர்ச்சி அடைந்து நடுங்கும்படியான ஒரு துன்பமும் வராது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்திவைப்பு குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம், வினாக்கள்—விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ இன்று (1-4-2003) தளர்த்தி, அந்த நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

இன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

திரு. சி. ஞானசேகரன்: எங்கள் ஊரில் ஜலகண்டேஸ்வரர் கோயிலில் இன்றைக்கு..

2. வரவு-செலவுத் திட்டம், 2003-2004, பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2003-2004* ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதமும், பதிலுரையும். திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2003-2004* ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி சில கருத்துகளை நான் கூற விழைகிறேன்.

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு"

என்று சொல்கிறார் வள்ளுவர்.

'குறை கூறுபவரின் சொற்கள் தன் காதுகளுக்கு கசப்பாய் இருப்பினும் அவற்றின் பயன் கருதி அவற்றைப் பொறுத்துக்கொள்ளும் பண்புடைய அரசனின் குடையின்கீழ் உலகம் முழுவதும் தங்கும்' என்று வள்ளுவர் அழகாகச் சொல்லியிருக்கிறார். அதை இந்த நேரத்திலே நான் முதலிலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.